## பிரதமரே! நாடாளுமன்றத்தை மதித்து

# அவைக்கு வந்து எங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்!

## மாநிலங்களவையில் – திருச்சி சிவா பேச்சு!

புதுடெல்லி, ஆக.8-

**மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேசுகையில், “பிரதமர் அவர்களே? நாடாளுமன்றத்தை மதித்து அவைக்கு வந்து எங்கள் கேள்விகளுக்கு எல்லாம் உரிய பதிலைச் சொல்லுங்கள்” என்று குறிப்பிட்டார்.**

அவர் ஆற்றிய உரை வருமாறு :-

ஆபரேஷன் சிந்தூரில், நம்முடைய எல்லையையும் மக்களையும் காக்க அபாரமான வீரத்துடனும் தீரத்துடனும் போராடிய நம் படைவீரர்களுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றியையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரின் துயரத்திலும் நாங்கள் பங்கெடுத்துக்கொள்கிறோம்.

பல்வேறு கேள்விகள் விடையளிக்கப்படாமலேயே இருக்கின்றன. மிக, மிக முக்கியமான சிலவற்றைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இத்தருணத்தில் இங்கே எதிர்க்கட்சிகளாக உள்ள அரசியல் கட்சிகளை நாம் பாராட்ட வேண்டும். பஹல்காம் தாக்குதலின் போதும் அதற்குப் பின் நடந்த ஆபரேஷன் சிந்தூரின்போதும், எங்களுடைய தார்மீகமான கேள்விகளுக்கே விடை கிடைக்கவில்லை. அதற்காக சிறப்பு நாடாளுமன்ற அமர்வு தேவை என்ற எங்களின் கோரிக்கைக்கும் செவிசாய்க்கப்படவில்லை. எங்களுடைய கோரிக்கைகள் கேட்கப்படாமலேயே காற்றில் பறக்கவிடப்பட்டன.

### தயக்கமின்றி பங்கேற்றோம்!

இருப்பினும், வெளிநாடுகளுக்கு செல்ல அனைத்து கட்சி உறுப்பினர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டபோது, எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் எதிர்க்கட்சிகள் அந்தக் குழுவில் இணைந்தன. அப்படி இணைந்ததன் மூலம் நாங்கள் தேசத்துடன் ஒத்துழைக்கிறோம் என்று உணர்த்த விரும்பினோம். இதில் எந்த குழப்பத்திற்கும் இடம் இல்லை.

எப்பொழுதெல்லாம் நாடு தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடுகிறதோ, அப்பொழுது நாங்கள் ஒன்றாக இணைகிறோம். எங்கள் கட்சியின் நிறுவனர் – தலைவர் அண்ணா ஒரு முறை அமெரிக்கா சென்றிருந்தார். ‘யேல்’ பல்கலைக்கழக மாணவர்களிடையே அவர் உரையாற்றுகையில் ‘உங்கள் நாட்டின் வெளியுறவுக் கொள்கையை நீங்கள் விமர்சிப்பீர்களா?’ என்று அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர், எங்களிடம் பல்வேறு விவகாரங்கள் உள்ளன. ஆனால் அவற்றை நாங்கள் எங்கள் மண்ணிலேயே தீர்த்துக் கொள்வோமே தவிர, வெளிநாட்டு மண்ணில் தீர்க்க மாட்டோம், என்று பதில் அளித்தார். அதைப்போலவே, உங்கள் பிரதிநிதிகள் குழுவில் நாங்கள் இணைந்தோம், வெளிநாட்டவர்களுக்கு உணர்த்தினோம், திரும்பி னோம்.

தற்போது நம்முடைய கேள்வி என்ன?

எத்தனை நாடுகளுக்கு சென்றோம்? நமக்கு எத்தனை நாடுகள் ஆதரவு அளித்தன? நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை சந்தித்தது யார்? அவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களா? நம் செயல்பாட்டிற்கு ஆதரவளிக்கக்கூடிய வன்மை பெற்ற அந்நாட்டு பிரதிநிதிகளா அல்லது அந்நாட்டு குழுவா? இந்தக் கேள்விக்கு இன்னும் பதில் அளிக்கப்படவில்லை.

மற்றொரு விஷயம். பிரதமர் அவர்கள் தன்னை ‘கடவுளின் குழந்தை’ என்று குறிப்பிட்டுக்கொண்டார். பலர் இதனை விமர்சித்தனர். ஆனால் நான் அந்த வாசகத்தை ஏற்றுக்கொள்கிறேன், ஏனென்றால் அவரும் கண்ணுக்கு தென்படுவதில்லை. அவரைக் காணவே முடியவில்லை. ஆபரேஷன் சிந்தூரைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் உரக்க நாடு முழுவதும் பெருமைப் பேசிக்கொண்டிருக்கிறார்.

### நாடாளுமன்றத்தை மதிப்பதில்லை!

உலக அளவில் அவர் உச்சபட்ச தலைவர் என்று உரத்த குரலில் பெருமிதமாக அவரைப் பற்றி இந்த அவைத் தலைவர் களிப்புடன் கூறுகிறார். உலக அளவில் அப்படி ஓர் இடம் பெற்ற அந்த தலைவரை, நாங்கள் சற்றே காண விரும்புகிறோம். அவர் இங்கு வருகை புரிந்ததும் இல்லை. நாடாளுமன்றத்தை மதித்ததும் இல்லை.

நம்முடைய நாடு நாடாளுமன்ற ஜனநாயக கருத்தியலின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மணிப்பூர் கலவரங்களின்போது, தயவு செய்து வாருங்கள் பிரதமரே என்று நாங்கள் கோரினோம். ஏனென்றால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இந்தப் பிரச்சினை இன்னும் ஓயவில்லை. அங்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது? அவர்கள் கட்சி தலைமையிலான அரசு அங்கு உள்ளது. தயவு செய்து நாடாளுமன்றத்திற்கு வாருங்கள் என்று அழைக்கிறோம்.

எங்களுக்கு என்ன பெயர் கிடைத்தது தெரியுமா? நாடாளுமன்றம் செயல்பட விடாமல் எதிர்க்கட்சிகள் முடக்குகின்றன என்று குற்றம்சாட்டப்பட்டது. இது முடக்கமில்லை, நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம். நாடாளுமன்றம் எதற்காக உள்ளது? விவாதிப்பதற்காக, தர்க்க ரீதியான விளக்கங்களுக்காக மற்றும் முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக. அரசுக்கு நாடாளுமன்றத்திற்கு பதில் அளிக்கும் முக்கியமான பொறுப்புள்ளது. நாடாளுமன்றத்திற்கு மக்களுக்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்புள்ளது. பிரச்சனைக்கு தீர்வு காண வேறெங்கு நீங்கள் செல்வீர்கள்?

### நாடாளுமன்றத்திற்கு ஏன் வருவதில்லை?

இலட்சக்கணக்கான மக்கள் கூடிய கூட்டத்தில் நீங்கள் உரையாற்றினால், அங்கிருக்கும் மக்களை மட்டும்தான் அந்த உரை சென்றடையும். ஆனால் நாடாளுமன்றத்தில் கூறப்படும் எதற்கும் சாட்சியம் உள்ளது, அதிகாரம் உள்ளது. அது ஒட்டுமொத்த உலகையே சென்றடையும். கடந்த காலத்தில் நீங்கள் ஏன் ஒரு முறை கூட வரவில்லை? பஹல்காமிலும், ஆபரேஷன் சிந்தூரிலும் கூட இதே நிலைதான்.

நீங்கள் நிறைய பேசுகிறீர்கள். மனதின் குரல் நிகழ்ச்சியில் நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று எங்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. நீங்கள் கையசைத்துக்கொண்டே வானூர்தியில் ஏறி செல்கிறீர்கள். கையசைக்கிறீர்கள், போகிறீர்கள், வருகிறீர்கள். ஆனால் நாடாளுமன்றத்தில் மட்டும் வருவதில்லை.

நாடாளுமன்றம்தான் உச்சபட்ச முக்கியத்துவம் கொண்டது. அப்படித்தான் நாங்கள் கருதுகிறோம். எனவேதான், நாங்கள் கோரிக்கை எழுப்பும்போது, அதற்கு ஆளும்கட்சி செவிசாய்க்கவில்லை என்றாலும், எங்கள் கோரிக்கையை நாங்கள் தொடர்கிறோம், உரத்த குரலில் தொடர்கிறோம். கோரிக்கை குறித்து குரல் எழுப்பவே நாடாளுமன்றம் உள்ளது. அவை ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது முடக்கம் ஏற்பட்டாலோ, எதிர்க்கட்சிகள்தான் நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்குகின்றனர் என்று எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சாட்டப்படுகிறது.

நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் ஆற்றும் உரை மக்களை சென்றடைகிறது என்பதால் நான் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். அவையை நடக்க விடாமல் முடக்குவது ஆளும்கட்சிதானே தவிர, எதிர்க்கட்சி கிடையாது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவை அமைதியாக நடப்பதற்கான சம அளவு பொறுப்பு அவர்களுக்கும் உள்ளது. அவர்கள் ஒத்துழைப்பதில்லை. நாங்கள் ஏதேனும் கோரிக்கை விடுத்தால், நாங்கள் உரையாற்றினால், அப்பக்கத்திலிருந்து நமட்டுச்சிரிப்பினை காண்கிறோம். இது ஏற்புடையதல்ல.

### நமட்டுச் சிரிப்பு சிரிப்பதா?

நாங்கள் மதிக்கத்தக்க மனிதர்கள்தான். மதிக்கத்தக்க கட்சிகளைச் சார்ந்தவர்கள்தான். மக்களிடம் எங்களுக்கு நிறைய மரியாதை உள்ளது. அப்படியிருக்க, நாங்கள் உரையாற்றும்போது இத்தகைய நமட்டுச்சிரிப்பினை ஏன் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சி தலைவர் பேசினால் கூட நமட்டுச் சிரிப்பு சிரிக்கிறீர்கள்.

பொதுவாக, ஒரு பாரம்பர்யம் உண்டு, ஒரு உறுப்பினர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது ஆளும் கட்சியிலிருந்து யாராவது குறுக்கிட விரும்பினால், உரையாற்றுபவரின் சம்மதம் கிடைத்தால் மட்டுமே குறுக்கிடும் உறுப்பினர் பேச வாய்ப்பு கிடைக்கும். முன்னர் ஒரு முறை, நட்டா அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, நான் எழுந்து நின்றேன். என் குறுக்கீட்டிற்கு அவர் சம்மதித்தார், எனக்கு மைக் வழங்கப்பட்டது. ஆனால் தற்போதைய நடைமுறை முற்றிலும் மாறிவிட்டது. எதிர்க்கட்சி தலைவர் சம்மதிக்கவில்லை என்றாலும் கூட, ஆளும் கட்சியிலிருந்து யார் எழுந்து நின்றாலும் அவர்களுக்கு மைக் கொடுக்கப்படுகிறது, எதிர்க்கட்சி தலைவரின் மைக் அணைக்கப்படுகிறது. எங்கே ஜனநாயகம்? ஓர் உறுப்பினர் பேச அனுமதிக்கப்படும்போது அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பேசுவதற்கு அவருக்கு உரிமை எண்டு.



நான் தற்போது ஆபரேஷன் சிந்தூர் குறித்து மட்டுமல்ல, பஹல்காம் தாக்குதல் குறித்தும் உரையாற்ற விரும்புகிறேன். எங்களுடைய எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்கப்படவில்லை. சிறப்பு அமர்வு கூட்டப்படவில்லை. எனக்கு பேசுவதற்கான உரிமை உள்ளது. என்னுடைய கட்சி என்னை அனுப்பியுள்ளது, நான் என்ன செய்ய வேண்டுமோ அதனை செய்துகொண்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத்திற்கு பொருந்தாதவற்றையோ, அல்லது அறம் தவறி நான் பேசினாலோ அல்லது விவாதத்துடன் தொடர்பில்லாதவற்றை நான் பேசினாலோ நீங்கள் என்னை கேள்வி கேட்கலாம். நான் சரியாக உரையாற்றவில்லை என்றால் அதன் விளைவை நானும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தற்போது நாடாளுமன்ற ஜனநாயகம் இல்லை. இந்த விவாதத்தின் போது கூட பிரதமர் அவர்கள் அவைக்கு வருவதில்லை. ஒவ்வோர் அமர்வு துவங்கும் முன்பும், அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டப்படுகிறது. ஆனால் ஒரு முறை கூட நாங்கள் பிரதமரை கண்டதில்லை. எங்களுக்கு அவ்வளவு மரியாதையே கொடுக்கப்படுகிறது.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகும் கூட ஓர் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது. அதற்கு உள்துறை அமைச்சர் மட்டுமே வந்திருந்தார். பிரதமர் எங்கே என்று நாங்கள் அனைவரும் கேட்டோம். மிகவும் மோசமான நிலைமை இருந்தது. பைசரன் பள்ளத்தாக்கில் 26 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அது குறித்து விவாதிக்கவே நாங்கள் அமர்ந்திருந்தோம். பிரதமர் எங்கே? அவர் வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தால் கூட நாங்கள் ஏற்றுக் கொண்டிருப்போம்.

### முக்கியத்துவம் எங்கே?

ஆனால் அவர் பிகார் மாநிலத்தில் தான் இருந்தார், அதுவும் தேர்தல் பிரச்சாரத்தில் இருந்தார். அரசியல் கட்சிகளுக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது? நாடாளுமன்றத்திற்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது? இந்த கேள்விகளுக்கு பதில் தேவை. இது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொள்ளும் நேரம் அல்ல. எதிர்க்கட்சிகள் குறித்த உங்கள் அணுகுமுறையையும் நாடாளுமன்றத்திற்கு கிடைக்கும் முக்கியத்துவத்தையும் நீங்கள் சற்றே மாற்றிக்கொள்ளுங்கள்.

‘பஹால்காமில் என்ன நடந்தது? ஏன் நடந்தது? நீங்கள் ஆபரேஷன் சிந்தூர் குறித்து உரையாற்றுவதற்கு முன், பஹல்காம் குறித்து பேச வேண்டும். அந்த சம்பவம் ஏன் நடந்தது? இது ஏப்ரல் 22ஆம் தேதி நடைபெற்றது, ஏப்ரல் 19ஆம் தேதி, பிரதமர் ஜம்மு காஷ்மீருக்கு பயணம் செய்வதாக இருந்தது. உளவுத்துறையினர் கொடுத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பயணம் ரத்துசெய்யப்பட்டது. காணொளி மூலம் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த துயர சம்பவம் நடப்பதற்கு மூன்றே மூன்று நாட்களுக்கு முன்பு, பிரதமர் அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. அத்தகைய உயர் பதற்றம் உள்ள இடத்திற்கு பொது மக்கள் செல்வதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட்டது?

அவர்கள் கொல்லப்பட்ட பகுதி மிகவும் பாதுகாப்பு நிறைந்த பகுதியாகும். அவர்கள் கருத்தின்படி, பாகிஸ்தானிலிருந்து வந்தததாக எண்ணப்படும், அந்த மூன்று தீவிரவாதிகளும் மிகவும் சுலபமாக இந்தியாவிற்குள் நுழைந்துமுள்ளனர். அவர்கள் நிதானமாக ஓர் இடத்திற்கு வந்து, நன்கு நேரம் எடுத்துக்கொண்டு, எல்லா மக்களையும் ஒரே இடத்தில் கூட வைத்து, அவர்களில் பலரை தேர்ந்தெடுத்து, துப்பாக்கியால் சுட்டு கொன்றுவிட்டு ஆசுவாசமாக திரும்பி சென்று, மறைந்துவிட்டனர். அதற்கு நீங்கள் என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், அவர்கள் காட்டிற்குள் சென்று மறைந்துள்ளார்கள். இவையெல்லாம் நடந்து முடிப்பதற்கு 40 நிமிடங்கள் ஆகியுள்ளது. இந்த 40 நிமிடத்தில் ஒரு பாதுகாப்பு அதிகாரி கூட வரவில்லை. இதற்கான காரணம் என்ன என்பதை பொறுப்புணர்வோடு பதில் அளியுங்கள்.

அரசமைப்புச் சட்ட பிரிவு 370 நீக்கப்பட்ட பிறகு, அப்பகுதியின் சட்டம் ஒழுங்கு ஸ்ரீநகரிலிருந்து நார்த் ப்ளாக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே இதற்கு பதில் அளிக்கவேண்டியது உள்துறை அமைச்சகத்தின் கடமை. இந்த நிகழ்வுக்கு யார் பொறுப்பேற்றுக் கொள்வது?

### சஸ்பென்சுக்கு பெயர் போனவர்!

கடந்த மூன்று மாதமாக நாங்கள் இது குறித்து ஒரு விவாதம் தேவை என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். நாங்கள் காத்திருந்தோம், காத்திருந்தோம், நேற்று வரை காத்திருந்தோம். நமது உள்துறை அமைச்சர் சஸ்பென்சுக்கு பெயர் போனவர். 2019ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், வரலாற்று சிறப்புமிக்க பழைய நாடாளுமன்ற கட்டிடத்தில் நாம் அனைவரும் இருந்த போது, எந்தவிதமான அலுவலுமில்லாமல் அவர் வந்தார். அலுவல் பட்டியலில் எந்த விவகாரமும் பட்டியலிடப்படாமல் இருந்தபோது, அரசமைப்புச் சட்ட திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. அரசமைப்புச் சட்டப்பிரிவு 370 குறித்த மசோதா. இது எவ்வாறு நிகழ முடியும் என்று பெரும் கூச்சல் ஏற்பட்டது. நாங்கள் அந்த மசோதாவிற்கு எதிர்நிலையை எடுத்தோம். அது வேறு விவகாரம்.

இங்கு நான் பாய்ண்ட் ஆஃப் ஆர்டரை(விதிமுறைகள் குறித்த விளக்கம்) எழுப்பும்போது, அந்த வினா அலுவல் பட்டியலில் இல்லாதபோது, அதனை அனுமதிக்கவில்லை. சபாநாயகரின் பரிந்துரையின்படி துணை அலுவல்பட்டியலில் அது இணைக்கப்பட்டது. அதன்பின் அது கொண்டுவரப்பட்டு, அவர்களுக்கு பெரும்பான்மை இருந்ததால் அவர்கள் நினைத்தது நடந்தது. இன்று கூட, அந்த தாக்குதல் நடந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு அந்த மூன்று தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் மே மோதம், இந்த தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்ததாக சந்தேகிக்கப்பட்டு இருவர் கைதுசெய்யப்பட்டனர். இரண்டு மாதங்களுக்கும் மேலாக அவர்களை விசாரித்துக் கொண்டிருக்கிறீர்கள். தேசிய புலனாய்வு முகமை விசாரணைக்கான நேரத்தை நீட்டிக்க சொல்லி கேட்டுக் கொண்டுள்ளது. என்ன தகவல் பெறப்பட்டது ?

இதற்கான தகவலை நாடாளுமன்றத்தில் கூறவில்லை என்றால், வேறெங்கு கூறுவீர்கள்? நாடாளுமன்ற அமர்வில் உள்ளபோது, இது குறித்து கேட்பதற்கு எங்களுக்கு எல்லா விதமான உரிமையும் உள்ளது. எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு அரசு பதில் அளித்தே ஆகவேண்டும். எங்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் பதில் அளித்தே ஆகவேண்டும்.

### மாநில அந்தஸ்தை எவ்வாறு நீக்கினீர்கள்?

அரசமைப்புச் சட்டப்பிரிவு 370 நீக்கப்பட்டபிறகு, சட்டம் மற்றும் ஒழுங்கை நிர்வகிக்கவேண்டிய பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படாத அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதம் என்ன? மக்களின் நம்பிக்கை, மற்றும் பாதுகாப்பு ஆகியவையே சேதம். அதிகாரிகள் யாருக்கும் பதில் அளிக்கவேண்டிய தேவையில்லை. நிறைய விஷயங்கள் நடந்துவிட்டன. யாரும் கேள்வி கூட கேட்கவில்லை. எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஒரு மாநிலத்தின் மாநில அந்தஸ்தை நீங்கள் எவ்வாறு நீக்கினீர்கள்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 1 என்ன சொல்கிறது? இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியம். அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 மாநிலங்களை உருவாக்குவது, அதன் பகுதிகளை மாற்றுவது, தற்போதுள்ள மாநிலங்களின் எல்லைகளையோ அல்லது பெயர்களையோ மாற்றுவது குறித்து வெகு தெளிவாக சொல்கிறது.

எந்த ஒரு மாநிலத்திலிருந்தும் ஒரு பிரதேசத்தை பிரித்து ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கலாம் அல்லது இரண்டு அல்லது மூன்று மாநிலங்களை இணைத்தோ, அல்லது அவற்றில் பகுதிகளை இணைத்தோ ஒரு மாநிலத்தை உருவாக்கலாம். அல்லது ஒரு பிரதேசத்தை ஒரு மாநிலத்துடன் இணைக்கலாம், ஒரு மாநிலத்தின் பரப்பளவை அதிகரிக்கலாம்.

இவைதான் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் ஒரு மாநிலத்தை யூனியன் பிரதேசமாக தரம் குறைக்கலாம் என்று எங்குமே சொல்லப்படவில்லை. எனவே அதனை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர விரும்புகிறீர்கள். இதற்கான பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களிலேயே, பொது மக்களுக்கு எதிராக நான்கு தீவிரவாத தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

உளவுத்துறை அறிக்கைகளின்படி, 2025ஆம் ஆண்டின் துவக்கத்தில் மட்டும், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் அருகில் 310 ஊடுருவல் முயற்சிகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு முதலில் பதில் அளியுங்கள். நான் உங்களை குற்றம் சொல்லவில்லை. உங்களை நோக்கி விரல் சுட்டவில்லை. எங்களுடைய தார்மீக கேள்விக்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது என்பதை சுட்டிக் காட்டுகிறேன்.

### எல்லைப் பகுதியில் 310 ஊடுருவல்கள்!

நாட்டிற்குள் பகை சக்திகள் 310 ஊடுருவல்கள் நடத்தியிருப்பது கடந்த சில ஆண்டுகளில் எல்லை பகுதியில் நடைபெற்ற ஊடுவல்களில் மிக அதிக எண்ணிக்கை. இது உங்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. ஒன்றிய உள்துறை அமைச்சகம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை தன் கட்டுப்பாட்டில் எடுத்த நான் கைந்து மாதங்களில் இந்த ஊடுருவல்கள் ஏற்பட்டுள்ளன. இது குறித்து கேள்வி எழுப்ப எங்களுக்கு உரிமை இல்லையா?

உளவுத்துறை ஆதாரங்களின்படி, பாதுகாப்புத் துறையினருக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஒத்துழைப்பு சரியாக இல்லை. அந்தப் பகுதி மிகவும் பதற்றம் மிக்க கூருணர்வு மிகுந்த பகுதி. உள்தறை அமைச்சர் பதில் அளிக்கையில், அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? இந்தியாவிலிருந்தா அல்லது பாகிஸ்தானிலிருந்தா? என்று அவையின் மூத்த உறுப்பினர் ப.சிதம்பரம் அவர்கள் கேட்டார். நீங்கள் தீவிரவாதிகளை ஆதரிக்கிறீர்களா என்று பதில் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கான பொருள் அதுவல்ல. அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் மற்றும் அவர்கள் எப்படி சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதற்கு எங்களுக்கு நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள் தேவை. என்னவிதமான ஆதாரம் என்பதை நீங்கள்தான் கூறவேண்டும்.

உள்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு விதமான ஆதாரங்களை அளித்தார். ஒன்று வாக்காளர் அடையாள அட்டை, இதனை குடியுரிமையை நிரூபிக்கும் ஆதாரமாக SIR ஏற்றுக் கொள்ளாது என்று நினைக்கிறேன். அவர் பாகிஸ்தான் குடிமகன் என்று அவரது வாக்காளர் அட்டை நிரூபித்ததாகவும் அவர்களிடமிருந்த சாக்லெட்டுகள் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவை என்றும் அமைச்சர் அவர்கள் கூறினார்.

என்னிடமுள்ள பேனாக்கள் சீனாவிலிருந்து வந்துள்ளன. அதில் சீன மொழியில் எழுதப்பட்டுள்ளது. இந்தப் பேனா என்னிடமுள்ளதால் என்னை சீனக் குடிமகன் என்று கூறுவீர்களா? என்னால் இதனை புரிந்துகொள்ள முடியவில்லை?

### பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு எங்கே?

உங்களுடைய எதிர்தாக்குதல் என்ன? சில தீவிரவாதத் தாக்குதல்கள் ஏற்பட்டுள்ளன. நீங்கள் மக்களை பாதுகாக்கவும் இல்லை, காப்பாற்றவும் இல்லை. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு என்ன நஷ்ட ஈடு வழங்கப்பட்டது? தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடக அரசுகள் நஷ்டஈடு வழங்கியுள்ளன. கர்நாடகாவில் நஷ்டஈட்டுத்தொகை ஏன் அதிகரிக்கப்படவில்லை என்று பாஜக குற்றம் சாட்டியுள்ளது? நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்?

இந்தத் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த மக்களும் அவர்கள் குடும்பங்களும் தெளிவாகக் கூறியுள்ளார்கள்,

**‘எங்களுக்கு பணம் தேவையில்லை. எங்களுக்கு தியாகி அந்தஸ்து வேண்டும். எங்களுக்கு வேலை வேண்டும் என்று கேட்கவில்லை. நீங்கள் அதனைக் கொடுத்தீர்களா? அதற்கான அதிகாரம் உங்களிடம்தான் உள்ளது, எங்களிடம் இல்லை. நீங்கள் அவர்களை இப்படி தானே மதித்தீர்கள்?’**

மக்கள் அவர்கள் வாழ்க்கையையே இழந்துள்ளனர். அவர்களது குடும்பங்கள் அங்கீகாரத்திற்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அது வழங்கப்படவிலை. அதைச்செய்யாமல் நீங்கள் வந்து என்ன சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். பாகிஸ்தானிகள். அதனைச் செய்தனர் என்று கூறுகிறீர்கள். இதற்கு உங்களுடைய பதிலடி என்ன என்று கேட்டால், உடனடியாக ஆபரேஷன் சிந்தூர் என்று கூறுகிறீர்கள்.

பாகிஸ்தானில் 100 கிலோமீட்டர்கள் தூரம் சென்று வெறும் இராணுவ தளங்களை மட்டும் தாக்கியிருக்கிறீர்கள். ஆனால் நேற்றும் இன்றும் மக்களைவையில் அரசு என்ன சொன்னது தெரியுமா? நாமும்தான் இராணுவ தளங்களை அழித்தோம். என்று ஆளும்கட்சியின் சார்பில் தெரிவிக்கப்படுகிறது

தேசிய பாதுகாப்புச் செயலாளர் அஜித் தோவல், வெறும் 9 தளங்கள் தான் அழிக்கப்பட்டுள்ளன என்றார். ஆனால் நாட்டின் அரசுசார் தொலைக்காட்சி நிறுவனமான தூர்தர்ஷன், 11 தளங்கள் தாக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது. அவர்கள் எதைத் தான் தாக்கினார்கள்? சண்டிகர், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களில் முழு மின்னடைப்பு ஏற்பட்டது. அவர்கள் ஒருவிதமாக தாக்குதல் நடத்தினர். நீங்கள் உடனடியாக எதிர் தாக்குதல் நடத்தினீர்.

அனைத்திற்கும் பண்டிதர் நேரு தான் நாட்டை சீரழித்தார் என்று கூறுகிறீர்கள். நவீன இந்தியாவைக் கட்டமைத்தவர் அவர். அதனை யாரால் மறுக்க முடியும். மும்பை தீவிரவாதத் தாக்குதல் நடந்தபோது டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் இராணுவ தீர்வை நோக்கிச் செல்லவில்லை. இராஜீய தீர்வு காண முயற்சித்தார். அதில் தொடர்புடைய அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் அவரே பேசினார். ஆனால் தற்போது என்ன நடந்துள்ளது? நீங்கள் 72 நாடுகளுக்கு 152 முறை அரசு முறை பயணம் சென்று வந்துள்ளீர்கள். பல்வேறு நட்புத்தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் உங்களை ஆதரிக்க ஒருநாடு கூட முன்வரவில்லை.

### ஒன்றுபட்டு செயல்பட்டோம்!

நீங்கள் அமைத்த பிரதிநிதிகள் குழுவில் எல்லா கட்சி எம்பிக்களும் இருந்தனர். எங்களுடைய கேள்விகளுக்கு விடையளிக்கப்படவில்லை என்றாலும், உங்களுடைய எந்த நடவடிக்கையும் திருப்தி அளிக்கவில்லை என்றாலும், அந்தக் குழுவில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சென்றோம். ஏன்? இந்தியா ஒன்றுபட்டுள்ளது, நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்று உணர்த்துவதற்காக பல்வேறு நாடுகளுக்கும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் சென்றார்கள். நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், அதற்காக உலக அரங்கில் ஒன்றுபட்டுதான் செயல்படுவோம்.

நீங்கள் உடனடியாக இராணுவ நடவடிக்கைக்காக சென்றீர்கள். அடுத்து நீங்கள் செய்த காரியம் எல்லோரையும் ஆச்சர்யப்படுத்தியது. பாகிஸ்தானிய கலைஞர்கள் வருவதற்கு தடை விதிக்கப்பட்டது. இத்தகைய செயலை எங்காவது கேட்டிருக்கிறோமா? கலைஞர்கள், திரைப்படங்கள், பாடல்கள் இவற்றிற்கு தடை விதிப்பது இராணுவ நடவடிக்கையா? இது தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையா? இது அபத்தமானது அல்லவா. இது சிறுபிள்ளைத்தனம் போல் தெரியவில்லையா? இருப்பினும் நீங்கள் இவ்வாறு செயல்பட்டீர்கள். இதற்கு பின் என்ன செய்தீர்கள்? சிந்துநதி நீர் ஒப்பந்தத்தை உடனடியாக நிறுத்தி வைத்தீர்கள். நாங்கள் இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்று ஒன்றன் பின் ஒன்றாக அறிவித்து நன்மதிப்பு பெற முயற்சித்தீர்கள். அந்த நதிநீரின் 75 சதவீத நீர் பாகிஸ்தானுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. அந்நாட்டு விவசாயத்தில் 25 சதவீதம் அந்நீரை நம்பி நடக்கிறது.

இஸ்ரேல் காசா போரை நாம் தொலைக்காட்சிகளில் காணுகையில் உள்ளம் வெடிக்கிறது. ஒரு கோப்பை கஞ்சிக்காகவும் உணவுக்காகவும் குழந்தைகள் கதறிக்கொண்டிருக்கிறார்கள். இறந்த குழந்தைகளை கைகளில் ஏந்திக்கொண்டு பெண்கள் அழுகிறார்கள். அவர்களுக்கு உணவு கொடுக்க முடியாமல் கொன்றதற்காக மன்னிப்பு கேட்கிறார்கள். தற்போது நீங்கள், ஒரு நாட்டின் மக்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் செய்கிறீர்கள். இது மனிதாபிமானமுடைய செயலா?

தொடர்ச்சி 14-ஆம் பக்கம்